RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt25113

OPEN ACCESS

# குறுந்தொகையில் களவியலில் தலைவன் தலைவியின் நிலைப்பாடுகள்

கா. புவனேஸ்வரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, கே.எஸ்.ரங்கசாமி கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி), திருச்செங்கோடு, தமிழ்நாடு, இந்தியா

# The positions of the leader and the leader in the field of Kurunthokai

K. Bhuvaneshwari [a, *]

[a] Department of Tamil, K.S. Rangasamy College of Arts and Science, Tiruchengode-637215, Tamil Nadu, India

* Corresponding Author: bhuvareshwarik@gmail.com

Received: 30-08-2024
Revised: 13-01-2025
Accepted: 20-01-2025
Published: 28-01-2025

Check for updates

**ABSTRACT**

Sangam literature helps us to understand the development of a civilized society and the richness of literature clearly. They are an artistic and literary form that records the lifestyles of humans. The people of the Sangam period can be known as having developed in all aspects of education, bravery, and moral welfare. Literature explains the life practices of the people. It also depicts daily events. The people of the Sangam period lived in harmony with nature. They also adopted a tribal lifestyle. We will see about the news of Kalaviyalaya in the article.

**Keywords:** Sangam literature, Civilized society, Kurunthokai, Lifestyle

## முன்னுரை

பண்பட்ட சமுதாய வளர்ச்சியையும் இலக்கிய வளமையையும் தெளிவாக அறிய சங்க இலக்கியங்கள் துணை செய்கின்றன. மனிதனின் வாழ்வியல் பண்பாடுகளைப் பதிவு செய்யும் கலை இலக்கிய வடிவமாகவும், பெட்டகமாகவும் அவை திகழ்கின்றன. கல்வி, வீரம், பண்பு நலன் அனைத்திலும் சங்க கால மக்கள் மேம்பாடு அடைந்தவர்களாக அறியமுடியும். இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கை நடைமுறைகளை விளக்குவனவாகும். அன்றாட நிகழ்வுகளையும் படம் பிடித்து காட்டுவன. சங்க கால மக்கள் இயற்கையைத் தழுவி வாழ்ந்துள்ளனர். மேலும் திணை சார்ந்த வாழ்க்கை முறையை மேற்கொண்டனர். களவியலின் செய்திகளை பற்றி கட்டுரையில் காண்போம்.

## இயற்கைப் புணர்ச்சி

தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு அதன் பின் பேசவும் செய்வார்கள். அந்நிலையில் இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வார்கள். அதற்கு முன்னிலைப்படுத்துதல் என்று கூறுவார்கள்.

ஐந்து திணைக்கும் இன்ப வாழ்வில் முதலில் அமைவது இயற்கைப் புணர்ச்சி தலைவனும் தலைவியும் முதல் முதலாக ஊழ்வலியால் ஒருவரை ஒருவர் நோக்கி காதல் செய்வது 'எதிர்ப்பாடு' ஆகும். தலைவனும் தலைவியும் இயற்கைப் புணர்ச்சியில் புணர்ந்த பின் தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து சென்றான்.

"கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறை தும்பி

காமம் செப்பாது கண்டது மொழிமோ

பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்" (குறுந்.பா.2:1-3)

தலைவியைப் பார்த்து பேசியத் தலைவன் அவளின் கூந்தலின் சிறப்பைத் தன் நெஞ்சிற்குக் கூறியது. துறை: இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கிய தலைவன் தன் நெஞ்சிற்கு சொல்லியது. (குறுந். பா. 116)

"முன்னிலையாக்கால் சொல்வழிப்படுத்தல்

நன்னையம் உரைத்தல் நகைநனி உறாஅ

அந்நிலையறிதல் தெளிவுளக்குறுத்தல்

தன்னிலை உரைத்தல் தெள;வாகப்படுத்தலென்று

இன்னவை நிகழும் எம்மனரர் புலவர்". (தொல்.1045)

இயற்கைப் புணர்ச்சிப் புணர்ந்த வழி தலைமகன் தலைமகளின் நாணினை நீக்குதற் பொருட்டு மெய் தொட்டுப் பயிறல் முதலான நிகழ்த்தி அவளை நலம் பாராட்டும் பாடலாக இது அமைந்துள்ளது.

## பாங்கற் கூட்டம்

தலைவனின் நண்பனை பாங்கன் என்று அழைப்பர். பாங்கன் தலைவனுக்கு தலைவியைப் பார்க்க அழைத்துச் செல்லும் நிகழ்வு தான் பாங்கர் கூட்டம் ஆகும்.

தலைவனின் வேறுபாடு கண்டு கேட்ட பாங்கன் அதற்கு தலைவன் ஒரு பெண் மீது கொண்ட காமத்தால் என் கண் இஃது உண்டாயிற்று என்று தலைவன் சொல்லியது. துறை: தலைவன் பாங்கற்கு உரைத்தது. (குறுந்.பா.95)

அறிவுரை கூறிய பாங்கன் தலைவி பெறுமையானவள் என்று தலைவன் கூறினான். துறை: கழறிய பாங்கற்க்கு தலைவன் உரைத்தது. (குறுந்.பா.272)

"பாங்கன் நிமித்தம் பன்னிரண்டு என்ப" (தொல்.1048)

தலைவன் தலைவி கூடுவதற்கு தமக்குத் தாமே தன் நிலையை 12-நிலையில் கூறுகின்றான். அவை, பிரமம், பிராபத்தியம், ஆரிடம், தெய்வம், குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, அசுரம், இராக்கதம், பேய் என்ற பன்னிரண்டும் எனத் தொல்காப்பியர் எடுத்துரைக்கிறார்.

## பாங்கியர் கூட்டம்

பாங்கி என்பவள் தலைவியின் தோழி ஆவாள். பாங்கி என்பவர் செலிவித்தாயின் மகள் ஆவார். இக்கூற்றுகளில் மிக அதிகமாகப் பேசுபவளாக அமைவது தோழி கூற்று ஆகும்.

"அகப்பொருள் நாடகத்தில் தோழியே மிக முக்கிய துணைப் பாத்திரமாவாள். தோழி என்பவள் செவிலியின் மகள் என்கிறார் தொல்காப்பியர். அவள் செறிவும், நிறைவும், செம்மையும், செப்பும், அறிவும், அருமையும், உடையவள். தலைவியின் உறுகள் ஒம்பலைத் தன்னியல்பாகப் பெற்று உரனும் கொண்டிருப்பதால் தொல்காப்பியர் அவளைத் 'தாங்கரும் சிறப்பின் தோழி' என்று போற்றுவதில் நிறைவு காண்கிறார்" 1 என்று சரளா. இராச கோபாலன் கூறுகிறார்.

தலைவியுடன் இருப்பவர் தான் பாங்கியர்கள் தலைவியின் இன்ப துன்பங்களை பகிர்ந்துக் கொள்வார்கள். தலைவிக்கு ஏற்படும் இன்னல்களை தீர்ப்பவர்கள் பாங்கியர்கள்.

பாங்கியின் குறையை மறுக்கப்பட்ட தலைவன், என்னை துன்புறுத்தியவள் இன்னாள் என்று யாவரும் அறிந்து கூறும்படி, மடல் ஏறுதல் என்று பாங்கி கேட்கக் கூறியது. துறை: 'மடன்மா கூறு

மிடனு மாருண்டே' என்பதனால் தோழி குறை மறுத்துழித் தலைவன், மடலேறுவல் என்பது படச் சொல்லியது. (குறுந்.பா.14)

தலைவி நிலையை தோழி தலைவனிடம் எடுத்துரைக்க கூறுவதையும், தலைவனின் நிலையைத் தோழியிடம் எடுத்துக் கூறுவதாகவும் அமைந்துள்ளது.

## பகற்குறி

தலைவன் தலைவியைப் பார்க்க பகல் பொழுதில் வருவது தான் பகற்குறியாகும். தலைவன் தலைவியை பார்க்க வீட்டுக்கு புறத்தே தலைவிக்கு நன்றாகத் தெரிந்த இடத்தில் தான் பார்த்துக் கொள்வார்கள். தோழியும் உடன் வருவாள்.

"பகலில் சந்தித்துக் கூடுதல் பகற்குறியாகும். தோழியின் உதவியுடன் தலைமக்கள் இருவரும் தலைவிக்கு நன்று அறிந்து பழகிய இடத்தில் கூடுவது பகற்குறியாகும்" 2 என்று துறை. இரவிக்குமார் கூறுகிறார்.

பகலில் வந்து தலைவியோடு அளவிளாவிய தலைவனிடம் என் ஊருக்கு வந்து இரவில் தங்கி செல்வாயாக என்று தோழி கூறுவதாக அமைவது. துறை: பகல் வருவானை இரவுக் குறி நேர்ந்தாள் போன்று வரைவுக் கடாயது. (குறுந்.பா.179)

## இரவுக்குறி

தலைவியின் வீட்டில் காவல் மிகுதியால் தோழி தலைவனை இரவில் வரச்சொல்லுதல். தலைவனும் தலைவியும் இரவில் சந்தித்துக் கொள்ளும் இடம் இரவுக் குறியாகும். இரவுக்கு தலைவியின் வீட்டிற்கு புறத்தே நிகழும் இடம் இரவுக்குறியாகும்.

"இரவில் தலைமக்கள் சந்தித்துக் கொள்ளும் இடம் இரவுக்குறியாகும். இரவுக்குறி தலைவியின் வீட்டு அருகே நடைபெறுவது. தலைவியின் தந்தை செல்வச் செழிப்பு உள்ளவராகத் திகழ்வதால் அவனது இல்லம் பரந்தப்பட்ட நிலப்பரப்பில் அமைந்திருக்கும். அதாவது இன்றைக்கு வழங்கும் பண்ணை வீடு போல் தோட்டம், குளம், மரங்கள் என இயற்கை சூழல் அமைப்போடு காணப்படும். எனவே இரவுக் குறி தலைவியின் வெள்ளத்திற்கு அருகே நடைபெறும்" 3-என்று துரை. இரவிக்குமார் கூறுகிறார்.

தலைவன் மாலைப் பொழுதில் நம்மை பிரிந்து செல்ல வருந்துகின்றான் என்று கூறும் வாயிலாக அவன் இரவுக்குறி விரும்புதலைத் தோழி தலைவிக்குக் கூறுகிறாள். துறை: தோழி கிழத்தியை இரவுக்குறி நயப்பக் கூறியது. (குறுந்.பா. 346)

முன்பனிக்காலம் வந்தும் இன்னும் பிரிந்து சென்ற தலைவன் திரும்பி வரவில்லை. ஆகவே, தலைவி வருத்தத்துடன் இருக்கிறாள். "அவர் உன்மீது மிகவும் அன்புடையவர். அவர் விரைவில் திரும்பி வருவார். நீ கவலைப்படாதே." என்று தோழி தலைவிக்கு ஆறுதல் கூறுகிறாள். அதற்குத் தலைவி, "பிரிந்து செல்வதற்கு முன் அன்புடையவராகத்தான் இருந்தார். ஆனால், முன்பனிக்காலம் வந்தும் அவர் இன்னும் வரவில்லையே. இனி என்னோடு அன்பாகவும் எனக்கு ஆதரவாகவும் இருப்பவர் யார்?" என்று தன் ஐயத்தையும் அச்சத்தையும் தோழியிடம் தெரிவிக்கிறாள். துறை: பருவங்கண்டு அறிந்த தலைவி வருவரென்று வற்புறுத்தும் தோழிக்கு சொல்லியது. (குறுந்.பா. 82).

## அல்லகுறி

தலைவன் தலைவி சந்திக்க இரவுப் பொழுதில் வருவதை உணர்த்தும் வகையில் பறவைகளின் ஒசை அமைவதால் அது அவன் வருகையை அவளுக்கு அறிவுறுத்துகின்ற விதமாக அமைகின்றது.

தலைவனும் தலைவியும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருவரும் சந்தித்துக் கொள்வர். தலைவன் வந்தவுடன் ஒரு ஒலியை எழுப்புவான். அந்த குறிப்பை உணர்ந்த தலைவி அவ்விடத்தை நோக்கிச்

செல்வாள். தலைவன் வருவதற்கு முன்பே குறிப்பை உணர்ந்த தலைவி அவ்விடத்திற்குச் செல்கிறாள். ஆனால் தலைவனின் ஒலி என்று தவறாக எண்ணித் தலைவனை சந்திக்காமல் வீடு திரும்பினாள் தலைவி. இருவரும் சந்திக்கும் இடத்திற்கு தலைவன் வந்தவுடன் ஒலியை எழுப்புகிறான், தலைவி அங்கு வரவில்லை. தலைவன் ஏமாற்றத்துடன் வீடு திரும்புகிறான். அவளை அடைவதற்கு அரியவள் என்று தன் நெஞ்சிற்கு கூறுகிறான் தலைலன். துறை: 1. அல்ல குறிப்பட்டு மீளும் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது,

2. இஃது இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைவன், பிரிந்த வழிக் கலங்கியதுமாம். (குறுந்.பா.120)

அல்ல குறியின் போது தலைவன் தலைவியை பார்க்க வந்ததை உணர்த்தும் விதமாக இத்துறை அமைந்துள்ளன.

## வரைவு கடாதல்

தலைவனை விரைவில் திருமணம் செய்துகொள் என்று வற்புறுத்துவது தான் வரைவு கடாதல் ஆகும். தலைவன் தலைவி திருமணம் செய்வதற்காக பொருள் ஈட்டுச்சென்ற தலைவன் இன்ன நாளில் வந்து திருமணம் செய்து கொள்வேன் என்று சொல்லி; தலைவியை விட்டுப் பிரிந்து செல்வது வரைவு கடாதல் ஆகும்.

"வரைவிடை வைத்த காலத்து வருந்தினும்

வரையா நாளிடை வந்தேன் முட்டினும்" (தொல்.1057)

இயற்கை புணர்ச்சி நீங்கிய பின்னர் தலைவன் இன்ன நாளில் நின்னை மணந்து கொள்வேன் என்று தோழியிடம் கூறி வரைவிடை வைத்துப் பொருள் பிரிகின்றான். இதனையே வரைவுக் கடாதல் என்று சொல்கின்றோம்.

அல்ல குறிப்பட்டு மறுநாள் வந்த தலைவன் மறைவில் இருப்ப அவன் முதல் நாள் வந்ததை தோழி தலைவிக்கு சொல்கிறாள். துறை: சிறைப்புறம். (குறுந்.பா.227)

"பூண்வனைந் தன்ன பொலஞ்சூட்டு நேமி

வாண் முகந் துமிப்ப வள்ளிதழ் குறைந்த" (குறுந்.பா.227 1-2)

இப்பாடலில் சிறைப்புறத்தான் அமைந்த தலைவன் பற்றி துறை குறுந்தொகையில் அமைந்துள்ளன.

## அறத்தோடு நிற்றல்

தலைவியின் திருமணத்திற்காக தடை ஏற்படும் போது தலைவி தன் காதலை உணர்த்துவதற்கு தலைவி அறத்தோடு நிற்பாள். இதில் தலைவி, தோழி, செவிலி, நற்றாய் ஆகிய நால்வரும் அறத்தோடு நிற்கும் நிலை உண்டாகும்.

"முன்னிலை அரன் எனப்படுதல் என்றிரு வகைப்

புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்". (தொல்.1059)

முன்னிலையில் பேசுதல், பிறரோடு பேசுதல் என்று அறத்தோடு நிற்றல் என்ற இரண்டு நிலையில் நடைபெறுகிறது.

## உடன்போக்கு

தலைவன் தலைவியை தன் ஊருக்கு அழைத்துச் செல்வது தான் உடன்போக்கு ஆகும். தலைவன் தலைவியைப் பாலை நிலத்தின் வழியாக தலைவியை உடன் அழைத்துச் செல்கிறான்.

அப்போது நற்றாய் புலம்புகிறாள். செவிலி தலைவியைத் தேடிச் செல்கிறாள். கண்டோர், வழியில் செல்வோரிடம் கேட்டுக் கொண்டே செல்கிறாள். இது போல தன் உடன்போக்கின் போது நற்றாய், செவிலி, தோழி புலம்பிக்கொண்டிருந்தார்கள்.

"எஞ்சி யோர்க்கும் எஞ்சுதல் நிலவே" (தொல். 992)

நற்றாய், செவிலி, கண்டோர், தோழி, தலைவன் இவர்களைத் தவிர மற்ற எல்லோரும் கூற்றுக்கு உரியவர்கள். அதாவது தலைவி, பாங்கன், பாணர், கூத்தர், உடையோர் ஆகியோர் ஆவார். துறை: தலைமகன் கொண்டு தலைப் பிரிதலை மறுத்துத் தானே போகின்ற வழி இடைச்சுரத்தின் பொல்லாங்கு கண்டு கூறியது.

"வேட்டச் செந்நாய் கிளைத்தூண் மிச்சிற்

குடுவி மொய்த்த வழுகற் சீன்னீர்" (குறுந்.பா.56 1-2)

உடன் போக்கில் தனியே பிரிந்து சென்ற தலைவன் பாலை நிலத்தின் தீமையைக் கண்டு அஞ்சும் விதமாக அமைந்துள்ளன.

## முடிவுரை

களவு ஒழுக்கத்தில் இயற்கை புணர்ச்சி, பாங்கன் கூற்று, பாங்கியற் கூற்று, பகற்குறி, இரவு குறி, உடன் போக்கு, அறத்தோடு நிற்றல் என்ற குறுந்தொகையில் அமைந்துள்ள பாடலின் துறைகளை வைத்து தலைவன் தலைவியின் நிலைப்பாடுகளை அறியலாம். இதனை எடுத்துரைப்பதற்கு தொல்காப்பியரின் நூற்பாக்கள் துணை நிற்கின்றன.

## References

சரளா. இராச கோபாலன், சங்க இலக்கியங்களில் தோழி, ப.47

துரை. இரவிக்குமார், அகப் பொருள் விளக்கம், ப.31

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2025. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License